

தமது கண்டுபிடிப்புடன் சாய்ராம் மாணவர்கள்

# போவோமா ஊர்கோலம்

பள்ளம், மேடு, காடு, மலை என்று எங்கும் தங்கு தடையின்றிச் செல்லும் வாகனம் ஒன்று இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? மேலே படத்தில் இருப்பது அத்தகைய வாகனம்தான். 'சொசைட்டி ஆஃப் ஆட்டோமோட்டிவ் எஞ்சினியர்ஸ்' என்ற அமைப்பு இந்தூரில் வாகன வடிவமைப்பு தொடர்பான போட்டியை கல்லூரிகளுக்கு இடையே அண்மையில் நடத்தியது. அதில் சென்னை சாய்ராம் கல்லூரி மாணவர்கள் வடிவமைத்த இந்த வாகனம் தென்னிந்திய அளவில் முதல் பரிசைத் தட்டிச் சென்றிருக்கிறது. இது 1000 கிலோ எடையை ஏற்றிக் கொண்டு 70 கி.மீ வேகத்தில் எந்தப் பாதையிலும் அநாயாசமாகப் பயணிக்குமாம்.